## பிரிவு 2
## அன்னையும் பிதாவும்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றார் ஔவைப் பாட்டி. ஆமாம் அவர்களே நாம் கண் கண்ட தெய்வங்களாகும்.

எம்மை ஐயிரண்டு திங்களாய் நொந்து, சுமந்து, பெற்றெடுத்து, ஆராட்டிச், சீராட்டி, உணவு உடை உவந்தளித்து ஆளாக்கித் தம் அருமை மிகு செல்வமெனப் போற்றுகின்ற தாய் தந்தையர்களே அன்னையும் பிதாவும் ஆகும். இவர்களை அம்மா, அப்பா, மாதா, பிதா, தாய், தகப்பன், எந்தை, தாய் எனப் பலவாறு கூறலாம்.

அம்மா என்று சொல்லும் பொழுது எனது நெஞ்சம் உருகுகின்றது, வாய் இனிக்கிறது. அப்பா என்று அழைக்கும் பொழுது ஆசை பொங்குகிறது. உடலில் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. அம்மா "அம்புலி அம்புலி ஓடிவா" என்று பாலும் சோறும் ஊட்டி ஆராரோ ஆரிவரோ என்று தாலாட்டி நித்திரையாக்கும் இனிய காட்சிகள் என் கண்முன்னே தெரிகிறது. நான் வேண்டுமென்று விசும்பு பண்ணும் பொழுதெல்லாம் அப்பாவின் தோள்களில் சவாரிசெய்யும் வாய்ப்புக் கிடைப்பதும் தனது தோளிலும் மார்பிலும் ஏற்றி வேடிக்கை காட்டுவதும் ஞாபகத்தில் வருகின்றன.

நான் பிறந்த நாளில் இருந்து தாய் தந்தையர்களையே உலகமாகக் காண்கின்றேன். தாங்கள் உணவு உண்ணாவிட்டாலும் எனக்கு உணவு ஊட்டுகிறார்கள். நான் விரும்பும் பொருட்களை எல்லாம் வாங்கித் தருகிறார்கள். அழகிய உடைகளை உடுத்து என்னை அழகு பார்க்கிறார்கள். எனக்கு நோய்வரும் போதெல்லாம் கண்துயிலாது அருகிருந்து கண்ணை இமை காப்பது போல் காத்து வருகிறார்கள். நான் நோயுறும் போது அவர்கள் முகம் வாடியிருக்கும். என்னுயிர்த்துடிப்பே அவர்களின் இதயத்துடிப்பு. என் எதிர் காலம் சிறப்புற வேண்டும் என எண்ணிக் கல்வி புகட்டுகிறார்கள். நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லித் தருகிறார்கள். எனது நலத்துக்காக தாய் தந்தையர்கள் தமது நலங்களை எல்லாம்விட்டு விடுகிறார்கள் சுருங்கக்கூறின் எனது சுகதுக்கம், நல்வாழ்வு அனைத்துமே எனது தாய் தந்தையர்கள்தான். ஏன் உங்களுக்கும் அப்படித்தானே? நாம் அழுதால் தாமும் அழுது, நாம் சிரித்தால் தாமும் சிரித்து நமது வாழ்வையே தமது வாழ்வாகக் கருதும் தாய் தந்தையர்களுக்கு ஒரு தெய்வமும் ஈடாகுமா.

உலகம் சுற்றிவந்து ஞானப்பழம் பெற எண்ணிய பிள்ளையார் தமதுதாய் தந்தையர்களாகிய சிவபெருமானையும், உமாதேவியாரையும் சுற்றிவந்து ஞானப்பழத்தைப் பெற்றுத் தாய் தந்தையர்களே உலகம், அவர்களே தெய்வம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டினார் அல்லவா?

எனவே நாமும் எமது தாய்தந்தையர்களைத் தெய்வமாக மதித்து அவர்களின் புத்திமதிகளைக் கேட்டு அவர்களின் மனம் கோணாது வாழ்ந்து வருவோமாக!

நன்றி வணக்கம்